ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2330/02 - 2023 මැයි මස 02 වැනි අඟහරුවාදා - 2023.05.02
2330/02 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பொலன்னறுவையில் தேசிய சிறுநீரகவியல் விசேட வைத்தியசாலையை நிறுவுதல்

சீன மக்கள் குடியரசின் மானியத்தில் 200 படுக்கைகளுடன் புதிதாகக் கட்டப்பட்ட பொலன்னறுவை தேசிய சிறுநீரகவியல் சிறப்பு வைத்தியசாலையானது 2021, யூன் 11 ஆந் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது. வைத்தியசாலைகளுக்கான புதிய வகைப்பாட்டிற்கமைய, இவ்வைத்தியசாலையானது சிறப்பு வைத்தியசாலையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, பொலன்னறுவை தேசிய சிறுநீரகவியல் விசேட வைத்தியசாலையானது, சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் இயங்குவதுடன் சிறுநீரகம் தொடர்பான நோய்களுக்கான சுகாதார வசதிகளை வழங்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்டது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ் வைத்தியசாலை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ளதுடன் நிறுவனத்தின் தலைவர் பணிப்பாளர் ஆவார்.

முகவரி : தேசிய சிறுநீரகவியல் விசேட வைத்தியசாலை, பொலன்னறுவை.
தொலைபேசி இல. : 027-2030300.

இந்த நிறுவனம் தொடர்பான பிற தகவல்கள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 01 | நிறுவனத்தின் பெயர் | தேசிய சிறுநீரகவியல் விசேட வைத்தியசாலை, பொலன்னறுவை |
| 02 | ஆதிக்க வரம்பு | மத்திய சுகாதார அமைச்சு |
| 03 | நிர்வாக மாவட்டம் | பொலன்னறுவை |
| 04 | தேர்தல் பிரிவு | பொலன்னறுவை |
| 05 | பிரதேச செயலாளர் பிரிவு | தமன்கடுவ |

| | | |
|---|---|---|
| 06 | கிட்டிய நிர்வாக அலுவலகம் | தேசிய சிறுநீரகவியல் விசேட வைத்தியசாலை, பொலன்னறுவை |
| 07 | நிறுவனத்தின் பொறுப்பதிகாரி | பணிப்பாளர் |
| 08 | அறிக்கையிடும் அதிகாரி | சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் |
| 09 | தபால் மற்றும் தந்தி அலுவலகம் | 172-பொலன்னறுவை நகரம் |
| 10 | அருகில் உள்ள புகையிரத நிலையம் | கதுருவெல |
| 11 | பொலிஸ் நிலையம் | பொலன்னறுவை |

**எஸ். ஜனக ஸ்ரீ சந்திரகுப்த,**
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

இலக்கம் 385, "சுவசிரிபாய",
வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு.

EOG 05-0001